Nallur Bra

விலை ரூபா 1·25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 17 முறை 28 இதழ் 235
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3-10-1986

இலங்கை இனப்பிரச்னை கலந்துரையாடல்களில்

## தீவிரவாதகுழு தலைவர்களும் பங்குபற்றுவார்கள் - 'அமிர்' நம்பிக்கை

சென்னை, ஒக்டோபர். 2

இலங்கை இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தீர்வு காணும் நோக்கில் நடைபெற்றுவரும் கலந்துரையாடல்களில் தீவிரவாத குழுக்களின் தலைவர்களும் பங்குபற்றுவார்களென்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேற்று ரூபவாஹினி நிருபருக்களித்த பேட்டியொன்றிலேயே திரு. அமிர்தலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய பேச்சுவார்த்தைகளில் தீவிரவாதக் குழுத்தலைவர்கள் பங்குபற்ற மறுத்தாலும் தமிழர் விடுதலைக் கூட்டணி இலங்கை அரசுடன் மூன்றும்சுற்று பேச்சுவார்த்தைகளை நடாத்துமா? என்ற நிருபரின் கேள்வி ஒன்றிற்கு திரு. அமிர்தலிங்கம் பதிலளிக்கையில்;

இந்திய அரசும், தமிழ்நாட்டுத்தலைவர்களும் தீவிரவாதக் குழுத்தலைவர்களுடன் இவ்விடயம் தொடர்பாக பேசினால் அவர்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளக்கூடிய

[5ம் பக்கம் பார்க்க]

● மகாத்மாகாந்தியின் பிறந்ததின வைபவத்தில்——

# ராஜீவ், ஜனாதிபதி ஸெயில்சிங் ஆகியோர் மீது கொலைமுயற்சி

## கூட்டத்தில் இருவர் காயம்: துப்பாக்கி நபர் கைது

புதுடில்லி, ஒக் 2

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, ஜனாதிபதி ஜியானி ஸெயில்சிங் ஆகியோர் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி ஒன்றிலிருந்து இரு தலைவர்களும் மயிரிழையில் உயிர் தப்பினர். இக்கொலை முயற்சியை மேற்கொண்ட துப்பாக்கி நபர் பாதுகாப்பு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டான்.

இவ்விரு தலைவர்களும் ஏனைய பல பிரமுகர்களும் காந்தியடிகளின் 117வது பிறந்த தின வைபவத்தைக் குறிக்கும் வகையில் டில்லியில் காந்தி சமாதி அமைந்துள்ள 'ராஜ்காட்'டில் வழிபாட்டு நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட போதே இக்கொலை முயற்சி இடம் பெற்றது.

'ராஜ்காட்' அஞ்சலி நிகழ்ச்சியை திரு ராஜீவகாந்தியும், திரு. ஸெயில்சிங்கும் முடித்துக் கொண்ட பின்னர் காந்தி சமாதிக்கு அண்மையில் ஒருபுதருக்குப் பின்னால் மறைந்திருந்த துப்பாக்கி நபர் ஒருவன் வேட்டுகளைத் தீர்த்தான்.

ஓரிரு வேட்டுக்களே தீர்க்கப்

[5ம் பக்கம் பார்க்க]

திருமலை-சாம்பல்தீவில்

## புலிகள்-இராணுவம் நேற்று அதிகாலை முதல் கடும்சமர்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருமலை மாவட்டத்திலுள்ள சாம்பல்தீவுக்குள் 3 ஸ்குவட் கார்களிலும், நடந்தும் 200க்கு மேற்பட்ட இராணுவத்தினர் செல்ல முற்பட்ட சமயம் தமிழீழ விடுதலைப் புலிப் படையினரின் கெரிலா அணியினர் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை தொடக்

(5ம் பக்கம் பார்க்க)

திருமலையில் கடந்த 3 நாட்களாக

## மக்கள் விடுதலைப் படை இராணுவம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருமலையில் கடந்த மூன்று நாட்களாக இராணுவத்தினர் மீது தமது மக்கள் விடுதலைப் படையினர் தாக்குதல் மேற்கொண்டுவருவதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

"கடந்த 30-ம் திகதி திருகோணமலையில் இரண்டுவிசைப் படகுகளில் மனித வேட்டைக்காக வந்த இராணுவத்தினரை எமது இராணுவப் பிரிவாகிய மக்கள் விடுதலைப்படை எதிர்த் தாக்குதல் நடத்தி முறியடித்து பின்வாங்க வைத்தனர்.

நேற்று முன்தினம் திருகோணமலையில் இராணுவத்தி

[5ம் பக்கம் பார்க்க]

வெறுமனே பத்திரங்களை—

## அங்குமிங்கும் அனுப்புவதில் எதுவித பயனுமில்லை - டிக்ஷிற்

கொழும்பு. வியா.

இலங்கை அரசின் உத்தேச சட்டவாக்கம் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் அபிப்பிராயங்களை ஆந்திய நிர்வாக அரசியலமைப்புத் துறை நிபுணர்கள் விரிவாக ஆராய்ந்து வருவதாக இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என் டிக்ஷிற் 'ரூபவாஹினி'க்கு அளித்த பெட்டி ஒன்றில் தெரிவித்தார்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்துக்கள் உடனடியாக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட மாட்டாது எனத் தெரிவித்த திரு. டிக்ஷிற் வெறுமனே பத்திரங்களை அங்குமிங்கும் அனுப்புதல் அதிக பயன் எதனையும் தராது என்று கூறியுள்ளார்

இப்போதைய தேவை ஆலோசனைகளை தீவிரமாக

(5-ம் பக்கம் பார்க்க)

ருக்கிங் தொடர்பாக எழுந்தநிலைமை

## அடையாள அட்டை பற்றிய கோரிக்கை தவறானது

— மாணவர் நிர்வாகக் குழு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற 'ருக்கிங்- தொடர்பாக வைக்கப்பட்ட கோரிக்கைகளில் பல்கலைக்கழகத்துள் பல்கலைக்கழக அடையாள அட்டையின்றி எவரும் அனுமதிக்கப் படக்கூடாது என்ற கோரிக்கை தவறானது என்பதை தாம் ஏற்றுக் கொள்வதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் நிர்வாகக் குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில்

## நேற்று 2வது நாளாக ஹர்த்தால் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். வர்த்தகர் சங்கம், யாழ் முஸ்லிம் போக்குவரத்துச் சங்கம், வடபிராந்திய லொறி போக்குவரத்துச் சங்கம் ஆகிய மூன்று அமைப்புக்களும் இணைந்து நடத்தும் காலவரையற்ற கடையடைப்பு, லொறிச்சேவை நிறுத்தம் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்றது.

யாழ். நகரிலுள்ள அநேக வர்த்தக ஸ்தாபனங்கள் மூடப்பட்டிருந்தன லொறிச்சேவைகளும் நடைபெறவில்லை.

நகரின் மத்தியிலும், மற்றும் பகுதிகளிலும் தேநீர் கடைகள்

(5-ம் பக்கம் பார்க்க)

## இணைப்பு குழுவின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

தனியார் வாகனக்கடத்தல் பொருள்கள் கொள்ளை அடித்தல் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இனறும் யாழ். நகரில் பூரண கடையடைப்புச் செய்யுமாறும் லொறிப் போக்குவரத்தை முற்றாக நிறுத்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

யாழ் வர்த்தகர் சங்கம்,

[5ம் பக்கம் பார்க்க]

வவனியா கள்ளிக்குளத்தில்

## இராணுவம் ஊர்காவற்படை தர்பார்: இருபது பொதுமக்கள் கொலை

யாழ்ப்பாணம், வெள்ளி

வவனியா மாவட்டத்தில் ரோந்துசென்ற இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் வீதியில் சென்றுகொண்டிருந்த பொழுது மக்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்தும், வெட்டியும் தாக்கியதாகவும் இதில் 20 பேர் பலியானதாகவும் புலிகளின் குரல் தெரிவிக்கிறது.

நேற்று முன்தினம் இப்பயங்கர சம்பவம் இடம்பெற்றது

மாமடுவவிலிருந்து சில மைல்களுக்கப்பாலுள்ள கள்ளிக்குளம் பகுதியில் ரோந்துசென்ற ஆயுதப் படையினரே இந்தப்படுகொலைச் சம்பவத்திலீடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழர்களுள் பெண்களும் அடங்கியுள்ளனராம்.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் குடியிருந்த தமிழ் மக்கள் அயலிலுள்ள தமிழ்க் கிராமங்களுக்குப் புகலிடம் தேடி வெளியேறியுள்ளனர். (மா-கே)

# வரி விளம்பரம

## விற்பனைக்கு

உரும்பராய் கிழக்கில் கோப்டாய் றோட்டில் (கற்புலம்) கிணற்று வசதியுடனும், பாதையுடனும் வீடு கட்டக்கூடிய 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: அ.சுப்பிரமணியம் [இரும்புக் கடை உரிமையாளர்,] டிப்போ அருகில், கோண்டாவில்.(C 4956)

இரண்டு ஏர்கண்டிஷன்கள் (Room Air conditioners) விற்பனைக்குண்டு தேவை ஏற்படின் ஆலோசனையுடன் பொருத்திக் கொடுக்கப்படும். ஒரு [Juice Cooler] ஜுஸ் கூலர் ஒரே நேரத்தில் மூன்றுவித பானம் குளிரூட்டக்கூடியதும் விற்பனைக்குண்டு "ASB Trade and Engineering", 12, நல்லூர் குறுக்கு வீதி. யாழ்ப்பாணம். (C4957)

இருபாலையில் கோண்டாவில் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய ஹோட்டல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- த சிவபாதம், கோண்டாவில் றோட். இருபாலை, கோப்பாய். (C-4887)

புறொயிலர் இறைச்சிக் கோழி (Broilers) சில்லறையாக விற்பனைக்குண்டு சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில் (C 4932)

## வகுப்புகள்

Spoken English, புதிய பிரிவு ஆரம்பம்: 4-10-86 சனி/ஞாயிறு மாத்திரம். மாலை 5-7 வரை. 12, வைமன் வீதி, நல்லூர். S. B. Iyar. C 4850

108 Brown Rd. A/L 87 பொது இரசாயனம். புதிய வகுப்பு ஆரம்பம் 05-10-1986 ஞாயிறு 2-30 p m. கிழமைக்கு 4மணிநேரவகுப்பு. நேரம்: சனி, ஞாயிறு 2-30 p m.-4-30p m [C 4945]

A/L 87 புலமைகள் ஆரம்பம் 04-10-1986 Sat and Sun 2 PM 3-15 PM அத்துடன் 87 பௌதிக துரித மீட்டல் வகுப்பும் ஆரம்பமாகியுள்ளது. ஆசிரியர் ரவீந்திரநாத் B sc. 3rd Cross, Street, Jaffna. (P. M. C. க்கு முன்பாக) (C-4949)

88ம் ஆண்டிற்கான G A.Q வெளிவாரி பட்டப்படிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன பல்கலைக்கழக பதிவுகளைப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: S அருள்நங்கை, உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம். [A 1424]

## தவறிவிட்டது

சென்ற திங்கட்கிழமை [29-9-86] இரவு மானிப்பாய்க்கும், ஆனைக்கோட்டைக்கும் இடையில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த பொழுது புதிதாகத் தைத்த சட்டைப் பார்சல் வழியில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசதாரருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உரிய சன்மானம் வழங்கப்படும். செ. நேசராஜா, பிடாரிகோவிலடி, தபாற்சந்தோர், ஆனைக்கோட்டை. [C4953]

## சேவை

காலை முதல் மாலைவரை எந்நேரமும் பஸ் நிலையத்தில் "போட்டோ ஸ்ரட்" பிரதிகளை எடுத்துக்கொள்ள மகிமிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம் [C4835]

உங்களுக்குத் தேவையான போட்டோஸ்ரற் பிரதிகள், தமிழ்-ஆங்கில தட்டெழுத்து வேலைகள், தெளிவான றோணியோ பிரதிகள் உயர்தர காகிதத்தில் குறித்த நேரத்தில் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள: கிளீன் கட், 239, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி எண்: 22823. C 1405

## தேவை

வண்ணார்பண்ணை இந்துக் கல்லூரி நாவலர் பாடசாலைகளுக்குச் சமீபமாய் சிறிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 43, கொய்யாத் தோட்டம், புதுவீதி. [C 4950]

பயிற்சிபெற்ற நெசவாளர் நெசவு பயிற்சி பெறுவதற்கு பயிற்சியாளர் உடன் தேவை கவர்ச்சியான சம்பளம் வழங்கப்பெறும். 5-10-86 காலை 9-00 மணிக்கு நேரில் வரவும். முகாமையாளர், சத்தியரூபன் நெசவாலை, ப. நோ. கூ சங்கம், சங்கானை, (C 4931)

சகல வசதிகளுடனும் தொலைபேசி உட்பட யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் 3 அல்லது 4 அறை கொண்ட பெரிய வீடு வாடகைக்கு தேவை. நல்லூர், சுண்டுக்குளி பகுதி விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: 292/2, Navalar Road, Jaffna. Tel 24169 (C 4930)

வயதான பெண் நோயாளியை வீட்டில் இருந்து கவனிப்பதற்கு 35-45 வயதுக்கு இடைப்பட்ட ஒரு பெண் Attendant தேவை. Nursing அனுபவமுள்ளவருக்கு முதலிடம் கொடுக்கப்படும். சாப்பாடு, தங்கும் இடவசதியுடனும் தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். பி. ப. 4 மணியில் இருந்து 6 மணிவரை கீழ் உள்ள விலாசத்திற்கு நேரே வரவும். செல்வமணி, 443, K. K. S. Road, யாழ்ப்பாணம். [C 4934]

திருநெல்வேலிப் பகுதியில் கட்டிட நிர்மாண வேலைத்தளமொன்றிற்கு அனுபவம் வாய்ந்தமேசன், கூலியாட்கள், தளபாடவேலை செய்யக்கூடிய தச்சுத்தொழிலாளர் தேவை. ஞாயிறு 5-10-86 அன்று காலை 9 மணிக்கும் 12 மணிக்குமிடையில் கீழ் குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு நேரில்வரம். அகதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். K. ஐயாத்துரை, மரக்காலை, K. K. S றோட். மருதனுமடம். [C 4955]

பிறசியர் மட்டும் தைப்பதில் நன்கு அனுபவமுள்ளவர்களுக்கு உடன் வேலைவாய்ப்பு கொடுக்கப்படும். ஒரு டசின் பிறசியர் தைப்பதற்கு சகல கொடுப்பனவுகளுமாக 24/- வேதனம் கொடுக்கப்படும். தங்கும் வசதி இல்லை. வேலைவாய்ப்பு விரும்புபவர்கள் கீழ் காணும் முகவரிக்கு உடன் நேரில சமுகம்தரவும்: A. S. பொன்னம்பலம், [மருதனமடத்திற்கும் இணுவில் காலிங்கன் தியட்டருக்கும் இடையில் உள்ள மாடிக்கட்டடம்], காங்கேசன்துறைவீதி, இணுவில். [C 4942]

## பயிற்சிகள்

Rodio, T.V Repairing செய்முறையுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. விபரங்கட்கு: Electronic Centre கல்வளை றோட், சண்டிலிப்பாய். ஆரம்பம்: 10-10-86 Sat, Sun பி ப 5 00 - 8 00. (C 4960)

## மின்தடை

### இலங்கை மின்சாரசபையின்

### முக்கிய அறிவித்தல்

1986—10—05ந்திகதிஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் 33 KV மின் பாதையில்அவசர திருத்த வேலைகள் செய்ய இருப்பதால் காலை 8-00 மணி தொடக்கம் மாலை 2-00 மணி வரை யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் பெரும்பாலான உபமின் நிலையங்களுக்கும், கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி, இராஜவீதி, கோப்பாய், இருபாலை, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கும் மின்விநியோகத் தடை ஏற்படுமென சகலமின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இம் மின்தடையால் ஏற்படும் சகல மின் நுகர்வோரிடமிருந்தும் அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபைதனது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

இப்படிக்கு,
மின்பொறியியலாளர்,
யாழ் பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னாகம்.

(A-1431)

## 11-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
மேரி கிருபையம்மா
இராஜக்கோன்

மலர்வு: 05-08-1917
உதிர்வு: 03-10 1975

அன்புவழிந் தொழுகு
மலர் வதனம் எங்கே?
ஆருயிரே புன்சிரிப்பின்
அமுதம் எங்கே?
மின் பிரமைபோல்
மின்னி மறைந்த
தாயே!
பொன்னுலகில் நின்று
துணைக்கரங்கள் நீட்டிப்
பொங்குதுயர் நீங்கி
யரவணைப்பாய்
அம்மா!

அன்புப் பிள்ளைகள்.
ஏழாலை வடக்கு,
ஏழாலை, யாழ்ப்பாணம்.
(C 4885)

## அறிவித்தல்

### அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கம் லிமிட்டெட்,

தபாற்கந்தோரடி, வட்டுக்கோட்டை.

பதிவு இல. S 154 / 26-3-1964 ஆரம்பம்: 22-8-1957

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை 5-10-86 காலை 9 மணிக்கு சித்தன்கேணி மாதர்சங்க மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

அங்கத்தவர்களுக்கு பொதுக்கூட்ட அறிவித்தலும் அறிக்கையும் தபால் மூலம் அனுப்பிவிட்டோம். இன்றைய சூழ்நிலையில் அத்தபால்கள் சிலருக்குக் கிடைக்காமல் இருக்கலாம். அவர்கள் இப்பத்திரிகை அறிவித்தலை ஏற்று கூட்டத்திற்கு தவறாது சமுகம் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இன்று தமிழ்ஈழத்தில் வங்கிகள் கடன் கொடுப்பனவு நிறுத்திக்கொண்டு வருகின்றன. காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் எம்மவருக்கு காப்புறுதி வழங்குவதை நிறுத்திக்கொண்டு வருகின்றது

இக்கால கட்டத்தில் எம்மவரைக் காத்து வழிநடத்துவது எமது சங்கம் ஒன்றுதான்.

அங்கத்தவர்களுக்கு மட்டும் கிடைக்கும் நன்மைகள்;

[I] பூப்பெய்தல் — நன்கொடை
[II] திருமணம் — "
[III] அந்தியகாலம் — "
[IV] பெறுப்புக் கடன்கள்— குறைந்தவட்டியில்
[V] வீடுகட்ட கடன்கள்
[VI] மாணவரின் உயர்கல்விக் கடன்கள்
[VII] 5 வருட நன்கொடை வைப்புத் திட்டம்
[VIII] சேமிப்புக் கணக்குகள்
[XI] விவசாயக் கடன்கள்.

(C4961) இயக்குநர் சபை.

## பிரயாண ஒழுங்குகள்

### - குவைத் -

| | | |
|---|---|---|
| 1. | J D Rasasegaram | G 0343328 |
| 2. | M. Yoganathan | F 019118 |
| 3. | S. Iynkaran | H 035975 |
| 4. | K Sivakugan | H 0458989 |
| 5. | S Muruganantban | H 0366706 |
| 6. | M J Bricard | G 0324752 |
| 7. | K. Jesuthasan | H 0460910 |
| 8. | P. Parameswaran | H 047824 |
| 9. | S. Thevarasan | H 0104191 |
| 10. | J D Rajasegaran | G 0343328 |
| 11. | M. Yoganathan | F 019118 |
| 12. | A M Viyansikooriadhas | H 0316064 |
| 13. | S. M. Anantharajah | H 0117679 |

மேற்குறிப்பிட்டிருக்கும் நபர்களுக்கு KUWAIT விசா கிடைத்துவிட்டது. உடன் எமது காரியாலயத்தில் சந்திக்கவும். உடன் பிரயாண ஒழுங்குகள் செய்யப்படும்.

**GROUP ATLANTIC**

(அடைக்கலமாதா கோவில் பின் பக்கம்)
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(A-1378)

## ஓராண்டு நினைவஞ்சலி



வல்லிபுரம்
கணேசமூர்த்தி
(அப்பு)
ஆண்டவன் படைப்பு:
30-07-56



வல்லிபுரம்
விவேகானந்தன்
(ஆனந்தி)
ஆண்டவன் படைப்பு:
22-03-61

ஆண்டவன் பறிப்பு
02-10-85

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து பாசத்துடனும் நேசத்துடனும் எங்களை நேசித்த எங்கள் அன்புச் செல்வங்களே நீங்கள் எம் இதயத்தை விட்டு அகலாது எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

இடைக்காடு, அச்சுவேலி. — பெற்றோர், உடன்பிறப்புகள். உறவினர். (C 4952)

## பிரிட்டனில்—

# அணுசக்தி நிலையங்களை அகற்ற தொழில்கட்சி தீர்மானம்!

லண்டன், அக் - 2

**பிரிட்டனில் உள்ள அணுசக்தி நிலையங்களை அகற்றும் தீர்மானமொன்று பிரிட்டிஷ் பாராளுமன்றில் பிரதான எதிர்க்கட்சியான தொழில்கட்சியினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மை பலத்துடன் இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டது.**

பிரிட்டனின் பிளக்பூல் நகரில் இடம்பெறும் தொழில் கட்சியின் வருடாந்த பொதுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் நேற்று நிறைவேறியது.

இது நிறைவேற்றப்படமுன்னர் தொழில் கட்சியின் பல் வேறுபட்ட தொழிற்சங்கத் தலைவர்களினதும் விவாதத்துக்கும் இது உள்ளானது.

இறுதியாக தொழில் கட்சி உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிரிட்டனின் நிலக்கரிச் சுரங்கத் தொழிற் சங்கத்தலைவர் கருத்து வெளியிடுகையில், ''அணுசக்தி நிலையங்கள் பிரிட்டனில் இருப்பது முற்றிலும் பாதுகாப்பற்றதாகும்'' என்றார்.

இதேவேளை மின்சாரத் துறையைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கருத்துவெளியடுகையில, ''பிரிட்டனில் உள்ள

உலகச் செய்திகள்

அணுசக்தி நிலையங்கள் மூடப்பட்டால் லட்சக்கணக்கானவர்கள் வேலை இழப்பார்கள் அத்துடன் பிரிட்டனின் மின்சார உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்படுவதுடன், அணுசக்தி அபிவிருத்தியில் பின்தங்க நேரிடும்'' என்றார்.

இவ் விவாதங்களையடுத்து நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டு பங்கு பலத்துடன் அணுசக்தி நிலையங்களை மூடும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிரிட்டனின் அடுத்த பொதுத் தேர்தலின் போது தொழிற்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இத்தீர்மானம் இடம்பெற்றிருக்குமென்பதை தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தொழில் கட்சியின் இத்தீர்மானத்தை தாட்சர் அரசு கண்டித்துள்ளது. பிரிட்டனில் வேலைவாய்ப்புக்களை இழக்கச்செய்யும் நடவடிக்கையாகவே இத்தீர்மானம் காணப்படுவதாகவும் அணுசக்தி துறைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளதெனவும் தட்சர் நிர்வாகம் கண்டனம் வெளியிட்டது

பிரிட்டனில் சுமார் 20 அணுசக்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன இவை இந்நாட்டில் ஐந்தில் ஒருபங்கு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை இனப் பிரச்னை:

# எம். ஜி. ஆர். ராஜீவுடன் பேச்சுவார்த்தை

புதுடில்லி, ஒக். 2

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் புதுடில்லியில் பேசசுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தைகளின் போது அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சிவ்சங்கர், திரு ஜி. பார்த்தசாரதி, திரு சிதம்பரம் ஆகியோருடன் நடாத்திய இறுதிச்

[6ம் பக்கம் பார்க்க]

# ''இனப்பிரச்னைக்கு விரைவில் சுமுக முடிவு காணப்படும்''

## ஐ. நா. செயலர் நாயகம் நம்பிக்கை

நியுயோர்க், அக் 2

இலங்கையின் இனப்பிரச்னைக்கு சுமுகமான அரசியல் தீர்வொன்று விரைவில் காணப்படுமென ஐ நா. செயலாளர் நாயகம் பெரஸ் டி குவெல்லியா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தற்போது அமெரிக்காவிலுள்ள இலங்கை வெளிநாட்டமைச்சர் ஐனுப் ஏ வி எஸ்

[6-ம் பக்கம் பார்க்க]

## வருடாந்த பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை, வியா

வட்டுக்கோட்டை மேற்கு சமாதான சபை வருடாந்தப் பொதுக் கூட்டம் வட்டுமேற்கு சுப்பிரமணிய வித்தியாசாலையில் இம்மாதம் 5ம் திகதி ஞாயிறு காலை திரு து. பாக்கியநாதன் தலைமையில் நடைபெறும். [இ]

# நியூயோர்க் நகரில் காந்தி சிலை

நியுயோர்க், செப் 2

நியுயோர்க் நகரில் மகாத்மா காந்தியடிகளுக்கு சிலையொன்று நிறுவப்பட்டுள்ளது.

காந்தியடிகளின் 117 வது பிறந்த தினத்தைக் குறிக்கும் வகையிலேயே நியுயோர்க்கின் 'யூனியன் சதுக்க பூங்கா'வில் அவரது சிலை வைக்கப்பட்டுள்ளது.

எட்டுஅடி உயரமான இச்சிலை வெண்கலத்திலானதாகும். இது வைக்கப்பட்டுள்ள இடத்திலேயே முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான ஜோர்ஜ் வாஷிங்டன் ஆபிரகாம் லிங்கன் ஆகியோரின் சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன.

நியுயோர்க் மேயர் புதிய காந்தி சிலை பற்றிக் கருத்து வெளியிடுகையில். ''இச்சிலையின் மூலம் நியுயோர்க் மக்களுடன் காந்தியடிகள் வாழ்வது போன்ற உணர்வு ஏற்படுகின்றது'' என்றார்.

## பொருளாதாரத் தடை;

# அமெரிக்கா மீது தெ. ஆபிரிக்க அரசு எச்சரிக்கை!

பிறிட்டோரியா, அக் 2

''தென்னாபிரிக்காமீது அமெரிக்கா முழுமையான பொருளாதாரத் தடை விதிக்குமானால் அமெரிக்காவிலிருந்து தானிய இறக்குமதிக்கும் தென்னாபிரிக்காவின் அயல் நாடுகளில் அதன் விநியோகத்திற்கும் பிறிட்டோறிய அரசுதடை விதிக்கும்'' என்று தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு பிக் போத்தா தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அரசு மீது பொருளாதாரத்தடை விதிக்கும் அமெரிக்க செனட் சபையின் தீர்மானத்தை அதிபர் றீகன் தமது 'வீட்டோ' அதிகாரத்தின் மூலம் ரத்துச் செய்திருந்தார். தொடர்ந்து இந்த 'வீட்டோ' பிரயோகத்தை அமெரிக்க செனட் சபை நிராகரித்தது இதனையடுத்தே திரு. போத்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. றீகன் வீட்டோ பிரயோகத்தை ஏற்றுக்கொள்ளும்படியும் அமெரிக்க செனட்டர்களை திரு. போத்தா கோரியுள்ளார்.

அவர் தெரிவித்திருப்பதாவது: திரு றீகன் வீட்டோ நிராகரிக்கப்பட்டு தென்னாபிரிக்கா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்குமானால் தென்னாபிரிக்காவின் அயல் நாடுகள் பாதிப்படை

[7-ம் பக்கம் பார்க்க]

# பயங்கரவாத செயல்கள் பிரான்ஸ் எச்சரிக்கை!

பாரிஸ், அக் 2

''பிரான்ஸ்மீது பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும் நாடுகளை பிரான்ஸ் அரசு கடுமையாகத் தண்டிக்கும்'' என்று பிரெஞ்சு பிரதமர் திரு. ஷிராக் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் முதல் பிரான்ஸில் இடம் பெற்றுவரும் குண்டுவெடிப்புக்களையடுத்தே பிரெஞ்சு பிரதமர் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பிரான்ஸில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களில் இதுவரை 12 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர்.

திரு ஷிராக் தெரிவித்திருப்பதாவது: ''பிரான்ஸ்மீது பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் சக்திகளின் நாடுகள் அல்லது அச்சக்திகளுக்கு பின்னணியாக இருக்கும் நாடுகள் எவையென்று அறியப்பட்டால் அவைமீது அரசியல் பொருளாதார ரீதியாக பிரான்ஸ் கடும் நடவடிக்கை எடுக்கும்'' என்று தெரிவித்தார்.

பவர்ஸ் உரம்
இணையற்றது

ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி; 20551-6

ரூபா 2,000/- க்கும் மேல்

பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- டென்மார்க்
- பிரான்ஸ்
- இத்தாலி
- ஜேர்மனி
- சுவிஸ்

ஆகிய நாடுகளிற்கு எங்கள் முகவர் வெகுவிரைவில் அழைத்துச் செல்ல உள்ளார்.
உடன் கடவுச் சீட்டுடன் தொடர்புகொள்ளவும்.

மற்றும்

பாஸ்போட், பொண்டிங், ரிக்கற்றிங், விசா எனபனவும் குறைந்த செலவில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

லிப்ருஸ் லிமிற்ரெட்,

R. G. பில்டிங்,
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(A-1370)

## மணிவாக்கு

ஓர் நிலைமை, அல்லது சூழ்நிலை குறித்து அச்சமுறத் தேவையில்லை அது குறித்த நமது மனப்போக்குதான் வெற்றியை அல்லது தோல்வியை ஏற்படுத்துகிறது.

— ஒஸ்கார் வைல்ட்

# நமதுநோக்கு

## இலங்கை தாக்கப்பட்டால்?

இலங்கை தாக்கப்பட்டால் அமெரிக்கா உதவிக்கு வராதென்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பிரதி உதவிச் செயலாளர் திரு. ஜேம்ஸ் லில்லி கூறியிருக்கிறார்.

ஏதோ ஒருநாடு இலங்கையைத் தாக்கத் திட்டமிட்டுவருவது போலவும் அப்படியான ஒரு சம்பவம் நிகழும் போது நட்பு நாடான அமெரிக்கா தலையிட்டு உதவ முடியாத நிலை இருப்பது போலவும் காட்டிக் கொள்வதே இந்த அறிவித்தலின் நோக்கமாக இருக்கும்.

உண்மையில் இப்பொழுது உள்ள நிலையில் இலங்கை வெளிநாடொன்றினால் தாக்கப்படுமானால் அமெரிக்கா உதவிக்குவராதென்று எந்த ஒரு மூளையில்லாத மனிதன்கூட நம்ப மாட்டான்.

ஏற்கனவே உள்நாட்டு விவகாரமான தமிழர் பிரச்னையில் இஸ்ரேலியர் தலையிட்டு ராணுவ ஆலோசனைகளும் உதவிகளும் வழங்கி வருவதற்கு அமெரிக்காவே சூத்திரதாரி என்பதை யார் மறுப்பார்கள்.

இஸ்ரேலியரின் நலன் காக்கும் பிரிவு அமெரிக்க தூதரகத்தின் ஆதரவுடனேயே செயல்பட்டு வருகின்றதென்பது ஒன்று போதாதா அமெரிக்கா எந்தளவுக்கு இந்த நாட்டின் அரசியல் ராணுவ பிரச்னைகளில் அக்கறை கொண்டிருக்கிறதென்பதைக் காட்டுவதற்கு?

எனவே வெளிநாடு ஒன்று தாக்குதல் நடத்தினால்தான் அமெரிக்கா தலையிடவேண்டும் என்ற நிலையில்லை. கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அமெரிக்க உதவிக்கு இலங்கைத் தலைவர்கள் விண்ணப்பம் செய்து கொண்டு வருகிறார்கள். இதற்காகவே ஜனாதிபதி ஜெயவர்த்தனா அமெரிக்காவுக்கு விஜயம் செய்து அதிபர் றீகனை நேரில் கண்டு பேசிவிட்டு வந்தார் ஏனைய முக்கிய அமைச்சர்களும் அடிக்கடி சென்று அமெரிக்க அதிகாரிகளைச்சந்தித்துவிட்டு வருகிறார்கள்.

ஆக, அமெரிக்கா வெளிப்படையாக ராணுவ ரீதியில் தலையிடுவதற்கு ஏதோ ஒரு காரணத்தைத் தேடுகின்றது அல்லது அப்படித்தலையிடுவதற்கான வாய்ப்பு ஏற்படும்போது அதனை இலகுவில் பயன்படுத்திக் கொள்வதற்கான உடன்பாடு ஒன்றை இலங்கையுடன் செய்துகொள்வதற்கு விருப்பம் கொண்டுள்ளது என்பதே உண்மை. இல்லையெனில் அவுஸ்திரேலியாவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை பற்றி அவர் ஏன் குறிப்பிட வேண்டும்?

இதே சமயம் "இலங்கை தாக்கப்பட்டால்" என்று அமெரிக்கா நினைக்கும் அளவுக்கு எந்த ஒரு அண்டை நாடும் நடவடிக்கைகளில் இறங்கியிருப்பதாகச் சொல்லமுடியாது.

பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, இந்தியா ஆகிய அண்டைய நாடுகள் எதனுடனும் இலங்கைக்குத்தகராறுஇல்லை. இலங்கைத்தமிழர் பிரச்னை தொடர்பாக மாத்திரம் இந்தியாவுடன் ஓரளவு பூசல்கள் உண்டு. இதிலும் கூட இந்தியா நட்பு முறையில் தீர்த்து வைக்க முன்வந்துள்ளதேயன்றி வேறு விதமான அச்சுறுத்தலில் இறங்கியதில்லை இலங்கையின் செயற்பாடுகள் அவ்வப்போது இந்தியாவின் பொறுமையைச் சோதிப்பதாகவும் வலுச் சண்டைக்கு இழுப்பது போலவும் அமைந்த போதிலும் அங்கு பொறுமை இழக்கப்படவில்லை. இலங்கை மீது படையெடுப்பதுபற்றி சுப்பிரமணியசுவாமி போன்ற அரசியல்வாதிகள் அடிக்கடி கூறுவது இந்திய அரசின் நிலைப்பாடாக இருக்கமுடியாது

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்குள்ளேயே இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணப்படவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக இருந்துவரும்போது, இந்திய படையெடுப்பை எப்படி எதிர்பார்க்கமுடியும்?

ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான இலங்கையர் அங்கு அகதிகளாக நிலைகொண்டிருப்பது இந்தியாவுக்கு பெரும்பிரச்னையே. இவர்களை எந்தவகையிலும் திருப்பி அனுப்பவேண்டிய நிலை இருக்கின்றது. அதற்கான ஒருவழியை இந்திய அரசு கண்டுபிடித்தேஆக வேண்டும், அதுராணுவரீதியிலும் அமையலாம ஆனால் அவ்வாறான சிந்தனை இந்திய அரசின் செயற்பாடுகளில் இதுவரைதென்படட்டதில்லை எனவே இலங்கை மீது இந்தியா படையெடுக்கும் என்ற அச்சத்துக்கே இடமில்லை.

எனினும், இப்பொழுது நடைபெற்றுவரும்மாகாணசபை ஏற்பாடுகளை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத விடத்து: இலங்கை அரசாங்கம் இதுவரை மேற்கொண்டதைவிட மிகக் கோரமான விதத்தில் ராணுவ தாக்குதல்களை நடத்த திட்டமிடலாம். அம்மாதிரி நிகழுமாயின் அமெரிக்காவின் வெளிப்படையான ஆதரவு தேவைப்படும். அதற்கு இப்பொழுதே ஏற்பாடு செய்து கொள்வதே இந்தஅறிவுப்பு என்று கருதலாமா?

ஸ்ரீராம ஜெயம்

## நீங்காத பெருந்துணையே

### ஸ்ரீ வேங்கடேசா

தீங்கனிவாய் நகைபூப்பத் திருவிழிகள் அருள
வேய்ங்குழலால் இசைநல்கும் ஸ்ரீவேங்கடேசா
ஈங்குனது மலரடிகள் துணையென்றுகொண்டோம்
நீங்காத பெருந்துணையே நின்பாதம் மறவோம்.

—இளங்கோ

# எத்தகைய தொழிற் கல்வி எமக்குத் தேவை?

எமது தற்போதைய சமூக அமைப்புக்கேற்ற வகையில் எத்தகைய தொழில்நுட்பக்கல்வி எமக்கு தேவைப்படுகின்றது? என்பதன் அடிப்படையில் நாம் எமது இளைஞர்களின் நிகழ்கால, எதிர்கால தேவைகளை நன்கு பரிசீலித்து அவர்களின் திருப்திக்கேற்றவகையில் பயனுள்ள தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தவேண்டியுள்ளது இதன் மூலமே அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்கமுடியும்

எமக்கு ஏற்பட்ட அண்மைக்கால அனுபவங்கள் தொழில் நுடபத்துறையில்ஈடுபட்டுள்ள எம்மவர் ஒவ்வொருவருக்கும், இப்பிரதேசத்துக்கேற்ற நன்கு திட்டமிடப்பட்ட தொழில் நுட்பக்கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஐந்து வருடகாலங்களில் எமது கல்வித்திட்டத்தில் இது சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தேன்.

வடமாகாணத்தில் மட்டும் 20 ஆயிரத்துக்குமதிகமான மாணவர்கள் வருடந் தோறும் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். இது ஓர் அங்கீகரிக்கப்பட்ட இடைநிலைக் கல்வித் தராதரமாகும். 16 வயதுக்கும் 18 வயதுக்குமிடைப்பட்டோரே இந்த தேர்வுக்குத் தோற்றுவோரில் அதிகமானவராவர்.

### உயர் கல்வி

இவர்களில் மூன்றிலொரு பகுதியினரான சுமார் 6 ஆயிரம் மாணவர்களே இப்பரீட்சையில் சித்திபெறுகின்றனர். தொடர்ந்து தமது சிரேஷ்ட இடைநிலைக்கல்வியையும் அடுத்த இருவருடங்களுக்குத் தொடருகின்றனர். கலை, வர்த்தகம், கணிதவியல். விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பயின்று க. பொ த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இவர்களில் ஆறிலொரு பகுதியினரான சுமார் ஆயிரம் மாணவர்களே தரப்படுத்தலின் கெடுபிடிகளுக்கு ஊடாகவும், பல்கலைக்கழகங்களில் தாம் தெரிவு செய்த துறையில் கல்வியைத் தொடரும்வாய்ப்புக்களை பெறுகின்றனர். பாடசாலையை விட்டு விலகுவோரின் ஐந்து சதவீதத்தினராக மட்டுமே இவர்கள் காணப்படுகின்றனர்.

வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரியின் 11-வது வருடாந்த டிப்ளோமா, மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 27-ந் திகதி மேற்படி கல்லூரியின் 'எபென்ஸ்' மண்டபத்தில் இடம் பெற்றது இவ்வைபவத்தில் இக்கல்லூரியின் இயக்குநர் வெளியிட்ட அறிக்கையின் சாரம்சம் இங்கே தரப்படுகிறது.

எஞ்சிய 95 வீதத்தினரும் இவர்களில் உயர்கல்வி பெறத்தகுதியுடைய 25 வீதத்தினரும் ஆண்டு தோறும் உயர்கல்வி வாய்ப்பின்றி சமூக அமைப்பில் சேர்ந்து கொள்கின்றனர்.

### முக்கிய மூலவளம்

விரக்தியினாலும், தமதுஎதிர்பார்ப்புகள் பூர்த்தியடையாத நிலையிலும் இத்தொகையினர் கிளர்ச்சிப் போக்கில் தமது நடவடிக்கைகளை வைத்துக் கொள்வதை நாம் அறிவோம்.

இத்தகையவர்கள் அனுதாபத்துடன் கூடியவழிகாட்டல்களுக்குட்படுத்தப்பட வேண்டியவர்களாகஉள்ளனர். இவர்களே எமது நாட்டைப் போன்ற ஒரு அபிவிருத்தியடைந்துவரும் ஒரு நாட்டின் மிகமுக்கிய மூலவளமாக உள்ளனர். இவர்களை வழிப்படுத்த வேண்டியுள்ளோம்.

தொழில் சார்ந்ததுறையில் சந்தர்ப்பங்களை வழங்கி தொழில் வாய்ப்புக்கான திறமைகளை இப்போட்டி மிகுந்த உலகில் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் இடைநிலைப்பாடசாலைகளிலேயே கல்வித்திட்டங்களை வகுத்து தொழிற் பயிற்சி கழகங்கள் மற்றும் அபிவிருத்தித்திட்ட வேலைகளை உருவாக்கி மாணவர்களை அவற்றில் பாடசாலை தவிர்ந்த வேளைகளிலும் விடுமுறைக் காலங்களிலும், ஈடுபடும் வகையில் பெற்றோர் முன்வரவேண்டும்.

எமது சனத்தொகையில் 60 வீதமானோர் மீன்பிடி மற்றும் பயிற்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர் இச் சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு இத்துறைகளில் நவீன தொழில்நுட்ப அறிவைப் புகட்டவேண்டும்; இதன்மூலம் அவர்களது பெற்றோர்களின் பாரம்பரிய முறைகளிலிருந்து நவீனபாணியில் அதிகபயன் தரும் தொழில் முறைகளை அவர்கள் கொண்டிருக்கச் செய்யலாம்.

### புதியவாய்ப்புகள்

உணவு உற்பத்தி, புடவைக் கைத்தொழில், தைத்த ஆடைத்தொழில் ஆகியதுறைகளில் பரந்தளவு தொழில் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன அதிகளவு படித்த இளம் பெண்களுக்கு பயிற்சி வழங்கி இந்த இலகு பொறியியல் துறைகளில் அவர்களுக்கு தொழில் பெற்றுக்கொடுக்க முடியும்.

பாடசாலைகளை விட்டுவெளியேறும் மாணவர்களைப் பொறுத்தவரைதொழில் நுட்ப மற்றும் சுயநிலைப் பயிற்சிகளை ஒழுங்கானமுறைகளில் வழங்கி எதிர்காலத்தை உறுதியுடன் அவர்கள் எதிர்கொள்ளச் செய்வதே எமது பங்களிப்பாகவுள்ளது

இந்நிலையில் எம்மைச் சூழ இடம்பெற்றுவரும் நிகழ்ச்சிகளால் இளைஞர் சமுதாயம் பாதிப் படையாதவகையில் எமது பாடநெறிகளில் புதியனவற்றைச் சேர்த்தும், மாற்றங்களை ஏற்படுத்தவும் வேண்டியுள்ளது இதன் மூலமே மாறிவரும் எமது சமூகஅமைப்பிற்கேற்றவகையில் அதன் எதிர்பார்ப்புக்களை எம்மால் பூர்த்தி செய்யமுடியும்.'

[அராலி நிருபர்]

## வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப பெருமாள் கோவில்

# வருடாந்த உற்சவம்

பண்டைத் தமிழர் சைவத்தையும், வைணவத்தையும் தம் இரு கண்களெனப் போற்றி வளர்த்தனர் என்று சரித்திரம் சான்று பகிர்கின்றது. இதற்கு உதாரணமாக தமிழ்நாடு எங்கணும் சிவாலயங்களும் வைணவாலயங்களும் எழில்மிகு கோபுரங்களுடன் காட்சியளிப்பதைக் காண்கின்றோம்.

சைவந் தழைத்தோங்கும் ஈழவளநாட்டில் சிறப்புப் பெற்ற வைணவாலயங்கள் உள. இவற்றில் யாழ். நகரின் மத்தியில் சிறப்புற்று விளங்கும் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் கோவிலும் ஒன்றாகும்.

### வைணவம்

ஆதிசங்கரர் தோற்றுவித்த ஆறு மதங்களுள் வைணவமும் ஒன்றாகும். அகில உலகத்தையும் காப்பாற்றும் தன்மையை விளக்குவதற்காக இவர் வைணவத்தை நிர்மாணித்தார். வைணவத்தின் நாதன் நாராயணன் இவனே உலகஇரட்சகனாகத் திகழ்கிறான் என்று கீதை கூறுகின்றது.

### வைணவ ஆகம விதிகள்

வைணவ ஆகம விதிகள் இருபெரும் பிரிவைக் கொண்டுள்ளன, அவை பாஞ்சராத்திரம், வைகானசம் எனப்படும். வேதங்கள் அசுரரால் மறைக்கப்பட்ட பின் நாராயணனே தோன்றித் தன்னை வழிபாடுசெய்ய ஐந்து இரவுகளில் உபதேசித்த பூஜா விதிமுறையே பாஞ்சராத்திரமாகும்.

### வைகானசம்

வேதங்களை மீட்டபின் விகனஸ்முனிவர் மூலம் நாராயணனை வேத முறைப்படி வழிபாடு செய்ய வைகானச பூஜா விதிமுறையை உணர்த்தினர். இதுவே வைகானசமாகும்.

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் நித்திய நைமித்திய பூஜைகள் வைகானச முறைப்படி நடைபெறுகின்றன. இவ்வாலயத்தில் எதிர்வரும் புரட்டாதித் திங்கள் 17ம் நாள் [3-10-86] இன்று கொடியேற்றவிழா ஆரம்பிக்கப் பெற்று [17-10-86 வரை] தொடர்ச்சியாக மகோற்சவம் நடைபெறவுள்ளது.

இம்முறை ரதோற்சவம் [11-10-86] கடைசிச் சனிவார விழாவுடனும் நவராத்திரி விழாவுடனும் ஒன்றுசேர்ந்து வருவது மிகவும் விசேடத்தையும் தெய்வீகத்தையும் மக்கட்கு அளிக்கின்றதாகப் பெரியோர் கருதுகின்றனர்.

ஆகையால் கண்ணபக்தர்கள் வேங்கடவனின் ஆலயத்தை அன்று நாடிவந்து கண்ணன் தேரில் உலாவரும் காட்சியைக் கண்டுகளித்து அவனை மெய்யன்புடன் வழிபட்டு பின்பு நவக்கிரக மூர்த்திகளின் வழிபாட்டை இயற்றி சக்திகளில் ஒருவளாகிய மகாலட்சுமியை துதித்து இஷ்டசித்திகளை பெற்று உய்வோமாக

— செ. நாராயணசாமி

## ஊழியர் சங்க தேர்தல்

யாழ்ப்பாணம், வெள்ளி கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித்திணைக்கள ஊழியர் கூட்டுறவு சங்கத் தேர்தல் அண்மையில் நடைபெற்றது.

மேற்படி தேர்தல் தொடர்பாக ஊழியர் குழுவொன்று தபால்சேவை மற்றும் போக்குவரத்து சீரின்மை ஆகியவற்றை காரணம் காட்டி தேர்தலை மீண்டும் நடத்த ஏற்பாடு செய்யுமாறு முல்லைத்தீவு கல்வித்திணைக்கள நலன்புரிச் சங்க உத்தியோகத்தர் திரு குரு செல்வநாயகத்திடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

கோரிக்கையை அடுத்து தேர்தல் கோரம் இல்லாமல் நடைபெற்றிருந்தால் மீண்டும் நடாத்துவதற்கு பிரதம கூட்டுறவு ஆணையாளர் மூலம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்தார். (எ)

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
சி. சின்னம்மா
[அளவெட்டி]

தோற்றம்: 22-09-1923
மறைவு: 13-10-1985
திதி: 03-10-1986

அன்பின் திருவுருவே பண்பின் உறைவிடமே பாசமலரே கள்ளம் இல்லா வெள்ளையுள்ளம் கொண்ட உங்களை காலன் கண்மூடித் திறப்பதற்குள் கவர்ந்து சென்று வருடம் ஒன்றாகி விட்டதம்மா. உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்தில் அணையாத தீபமாய் என்றும் ஒளி வீசுதம்மா இன்றைய நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூசணி அம்பாளை வேண்டி கண்ணீர் பூக்களைக் கொண்டு அஞ்சலி செலுத்துகின்றோம். உங்கள் பிரிவால் வாடும்:

மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள்.

C 4970

## கடைசி நேர வரி விளம்பரம்

### வகுப்புகள்

Computer Course I D. P வழங்கும் Diploma in Coumputer programming New Batch ஆரம்பம்: 04-10-86 (சனி 3-30 மணி பதிவுசெய்யும்போது செலுத்தவேண்டிய தொகை 500/-மட்டுமே Institute of Data Processing (Next to Sri Lanka Book Dept., 342, K K S Road, Jaffna T. phone: 24026. [C-4977]


வெலிங்டன்
10-30, 2-30, 4-30, 6-30
பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த
Space Hunter
(Adults only)
Sex-Action-Thrill

லிடோ
தினசரி காலை 10-30,
மாலை 2-30, 6-30
பிரபு – நளினி
நடித்த
புதிய வெளியீடு
கவரி
நியாயம்


## ஜே. வி. பி. உறுப்பினர் கைது

கொழும்பு, வியாழன்: தடைசெய்யப்பட்டுள்ள ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்த ஜி. பி. ஆரியதாஸ என்பவர் திருமலையில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

### ராஜீவ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன. ஆயினும் அவ்விரு தலைவர்களும் எதுவிதஆபத்துமின்றி தப்பித்துக் கொண்டனர். அந்த நேரம் கூட்டத்திலிருந்த இருவர் காயமடைந்தனர். துப்பாக்கி நபர் பாதுகாப்பு அதிகாரிகளினால் மடக்கிப்பிடிக்கப்பட்டதும், திரு ராஜீவ்காந்தியும் ஏனைய தலைவர்களும் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

தற்போது இந்நபர் இந்திய குற்றப்புலனாய்வுத் துறையினரின் பாதுகாப்பில் விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இவ்விசாரணைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற சில தகவல்களிலிருந்து துப்பாக்கி நபரின் அடையாளமும் நோக்கமும் இதுவரையில்தெளிவாகவில்லை எனினும் இவர் எந்த அரசியல் ஸ்தாபனங்களுடனும் தொடர்பற்றவர் என்றும் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து திரு. ராஜீவ்காந்தி மேற்கு மஹாராஷ்டிரா மாநிலத்திற்கும், திரு. ஸெயில்சிங் மத்திய பிரதேசத்திற்கும் விமானமூலம் சென்றனர்.

### ராக்கிங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; "சமூகத்திற்குரிய பல்கலைக்கழகம் சமூகத்துடன் இணைந்த வகையில் செயற்பாடுகளை அமைத்துக்கொள்வதற்கு மேற்கண்ட கோரிக்கை இடையூறாக அமையும் என்பது எமது கருத்து" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஓ]

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின், பாலர் பிரிவின் பெற்றோர்தின விழா இன்று நடைபெறவுள்ளது.

மேற்படி கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் இன்று பிறபகல் நடைபெறும் இவ்வைபவத்துக்கு. டாக்டர் ஆர் கணேசமூர்த்தி பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார்.

### நாளை

சுட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் நாளை காலை நடைபெறவுள்ளது

இப்பரிசளிப்பு வைபவத்துக்கு, மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு ஸி வி. விக்னேஸ்வரனும், திருமதி விக்னேஸ்வரனும பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்கின்றார்கள். [வி]

### யாழ் நகரில்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்காங்கே திறந்திருக்கக் காணப்பட்டன. மினிவான் பஸ் சேவைகள் நடைபெற்றன.

திரையரங்குகளில் படக் காட்சிகள் காண்பிக்கப்படவில்லை. [ச-எ]

### இணைப்புக் குழுவின்--

[1ம் பக்க தொடர்ச்சி]

முஸ்லீம் போக்குவரத்து ஒன்றியம், வட பிராந்திய லொறி போக்குவரத்துச் சங்கம் ஆகியவற்றின் இணைப்புக்குழு நேற்று கூடி மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. (மா)

### வெறுமனே--

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பரிசீலனைசெய்து ஒருமுடிவுக்கு வருவதேயாகுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாகஇந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்திக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரனுக்குமிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தை பற்றி அவர் எதுவும் வெளியிட மறுத்துவிட்டார். [சி]

### இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாத்தியக் கூறுகள் ஏற்படலாமென தான்நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று சென்னை திரும்பும் தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் நடைபெறவிருக்கும் மூன்றும்கட்ட பேச்சுவார்த்தை என் தொடர்பாக தீவிரவாதக்குழு தலைவர்களுடன் கலந்தாலோசிப்பார் எனவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். (சி)

### இராணுவம் மீது..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

னர் மீது நவீன மோட்டார் தாக்குதல் மேற்கொண்டதில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இத்தாக்குதலை அடுத்து பிற்பகல் ஹெலிகாப்டர்மூலம் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர் பிற்பகல் 4-30 மணி தொடக்கம் 2 பொம்பர் விமானமும் சேர்ந்துகொண்டு குண்டுத்தாக்குதல் மேற்கொண்டன. இவற்றை எதிர்கொண்ட எமது தரப்புத் தோழர்களுக்கு எதுவித இழப்பும் இல்லை

நேற்றுக்காலை 7 மணி தொடக்கம் இரண்டு ஹெலிகொப்டர்கள் சாம்பல்தீவைச் சுற்றி தாக்குதல் மேற்கொண்டன பொம்பர்விமானங்களும் சுற்றியவண்ணம் இருந்தன. இராணுவத்தை உட்செல்ல விடாது மக்கள் விடுதலைப் படையினர் தாக்குதல் மேற்கொண்டுவருகின்றனர்."


மிது வீடியோ மூவீசாரின்
இன்றைய வெளியீடு
மோகன், அமலா, செந்தில்,
மாதுரி, பூர்ணிமா ஜெயராம்
நடித்த
உன்னை ஒன்று கேட்பேன்
(தரமான பிரதி)
மிது வீடியோ மூவீஸ்
பிரதான வீதி,
சித்தன்கேணி.
(A 1432)


சிறைச்சாலை உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக

# நேற்று 2ம் நாள் பாத யாத்திரை

(அலுவலக நிருபர்)

சிறைச்சாலைகளில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழ் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் ஆதரவாக மாணவர் கூட்டமைப்பும் பொதுமக்களும் மேற்கொண்டிருக்கும் 2-வது நாள் தொடர் பாதயாத்திரை நேற்றுக்காலை ஆரம்பமானது.

திருநெல்வேலி முத்துத் தம்பி வித்தியாலயத்திலிருந்து நேற்றுக்காலை 7-30மணிக்கு புறப்பட்ட பாதயாத்திரைக் கோஷ்டியினர் கோண்டாவில் வடக்கு மத்திய கி மு. சங்கத்தைச்சென்றடைந்து அங்கு தமது காலை உணவைமுடித்துக் கொண்டனர்.

அங்கிருந்து புறப்படுபவர்கள் நண்பகல் உரும்பராய் நவசக்தி ச ச. நிலையத்தில் தமது மதிய போசனத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டு இரவு ஊரெழு கணேச ம.வி யை அடைந்தனர்

மீண்டும் இன்று மூன்றும் நாள் காலை 8 மணியளவில் ஆரம்பமாகும் இவ்வூர்வலம் சுன்னாகம் மருதனாமடம் ஊடாக இரவு இணுவில் சைவ மகளிர் வித்தியாலயம் சென்றடையும் (மா)

வவனியா, பாவற்குளத்தில்

## விடுதலைப்புலிகள்-படையினர் மோதல்: போராளி ஒருவர் காயம்

யாழ்ப்பாணம். வெள்ளி

வவனியா, பாவற்குளம் ஊடாக நடந்துசென்று கொண்டிருந்த தமிழீழவிடுதப்புலிகளின் போராளிகளுக்கும் உலுக்குளம் முகாமிலிருந்து வந்து ஒழித்திருந்த இராணுவத்தினருக்குமிடையில் ஏற்பட்டமோதலில் போராளி ஒருவர் காயமடைந்தார்

எனினும் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் பின்வாங்கினர்.

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நேற்றுக்காலை பாவற்குளம் வழியாக எமது வீரர்கள் சிலர் நடந்து சென்றுகொண்டிருந்த சமயம உலுக்குளம் ராணுவ முகாமிலிருந்து ஏற்கெனவே அவ்விடத்திற்கு வந்து ஒழித்திருந்த ராணுவத்தினர் எமது வீரர்களின் வருகையினைக் கண்டு தாக்குவதற்கு ஆயத்தமானார்கள் அவ்வேளை எதிர்பாராதவிதமாக எமது வீரர்கள் இராணுவத்தினரைக் கண்டு தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் தாக்குதலின் இறுதியில் ராணுவத்தினர் பின்வாங்கினர். இத்தாக்குதல் சம்பவத்தின் போது எமது தரப்பில் வீரரொருவர் காயமடைந்தார் ராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை. (கே)

மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கம்;

## நீதிமன்றப் பகிஷ்கரிப்பை ஒருவாரகாலம் நீடிக்கமுடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

சிறைச்சாலைகளில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்குஆதரவாக நீதிமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த மல்லாகம் மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் நீதிமன்றப் பகிஷ்கரிப்பை மேலும் ஒருவார காலத்திற்கு நீடிப்பதெனத் தீர்மானித்துள்ளது

இந்நீதிமன்றப் பகிஷ்கரிப்பு சம்பந்தமாக மல்லாகம் சட்டத்தரணிகள் சங்க செயலாளர் சட்டத்தரணி பஞோ சிறீதரன் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கம் மேற்கொண்டிருக்கும் நீதிமன்றப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைக்கு ஆதரவாக தமிழ்ப்பிரதேசங்களில் உள்ள சகல நீதிமன்றங்களின் சட்டத்தரணிகள் சங்கங்களும் ஏற்றவாறு தீர்மானம் மேற்கொண்டு நடவடிக்கையில் இறங்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது

சட்டத்தரணிகள் சங்கத் தீர்மானம் நீதி அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும்அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது [வா)

## 'எய்ட்ஸ்' நோயை குணமாக்க புதிய மருந்து

நியுயோர்க் ஆக 2

'எய்டஸ்' நோயைக் குணப்படுத்தும் நோக்கமாக இரண்டு புதிய மருந்துகள் தயாரிக்கப்பட்டுள்ளன

எதிர் விளைவுகள் ஏற்படுத்தாதவகையில் 'எயிட்ஸ்' நோயாளியின் ஆயுட்காலத்தை மேலும் நீடிப்பதற்கு இந்த மருந்து வகைகள் உதவும் என்று நியுயோர்க்கில் இன்று அறிவிக்கப்பட்டது (எ)

## நொத்தாரிஸ்மார் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் மாவட்ட மேல்நீதிமன்ற வலய பிரசித்த நொத்தாரிஸ்மாரின் கூட்டம் ஒன்று இன்று காலை 9 மணியளவில் யாழ் நீதிமன்ற வளவிலுள்ள பொது நூல்நிலையத்தில் நடைபெறவிருக்கின்றது.

### புலிகள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சம் இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையே இப்பகுதியில் மோதல் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினருக்கு உதவியாக இரு ஹெலிகொப்டர் வானத்தில் வட்டமிட்ட வண்ணமிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## அரசு அறிவிப்பு

கொழும்பு, வியா

மன்னார் உயிலங்குளம் என்னும் இடத்தில் இராணுவத்தினர் மீது தீவிரவாதிகள் நேற்று தாக்குதல் நடத்தியதில் ஒருவர் பலியானார் என்று அரசு அறிவித்துள்ளது. [எ]

## மக்கள் வங்கி கிளைகள்

# அடகுநகைகள் மீளளிக்க வாய்ப்பை எதிர்பார்க்கின்றன

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்தவர்களின் நகைகளை மிக விரைவில் உரியவர்களிடம் கையளிப்பதற்கு மக்கள் வங்கி வாய்ப்பை எதிர் பார்த்துக் காத்துள்ளதாக மக்கள் வங்கி நிதித்துறை மேலதிக பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய பகுதிகளில் அடகு வைத்தவர்களின் நகைகளை மீளளிப்புச் செய்வதற்கு பல தடவைகள் மக்கள் வங்கி முயற்சித்ததாகவும், பாதுகாப்பு காரணங்களினால் அவற்றை உடன் அமுல் செய்ய முடியாமல் போனதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ - ஓ)

## ஒய்வூதியம் பெறுவோருக்கு

# யாழ். அரசாங்க அதிபர் விடுத்துள்ள அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாதா மாதம் பெற்றுக் கொள்ளப்படாத ஓய்வூதியங்களை மீளளிப்புச் செய்வதில் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருப்பதால் ஓய்வூதியம் பெறுவோர் வழங்கப்படும் மாதமே தமது ஓய்வூதியங்களை பெற்றுக் கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் விடுத்துள்ள சுற்றறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது

இதேவேளை கொம்பியூட்டர் ஓய்வூதியப்பற்றுச் சீட்டினை பூரணப்படுத்தி தகுதி வாய்ந்த உத்தியோகத்தரைக் கொண்டு அத்தாட்சிப்படுத்திய பின்பே வங்கியிலோ, அஞ்சல் அலுவலகத்திலோ சமர்ப்பிக்க வேண்டும்.

வெளி நாடுகளில் வதியும் ஓய்வூதியம் பெறுநருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழமைபோல் மூன்று மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளதால் அவர்களும் பற்றுச்சீட்டை சரிவர நிரப்பி தத்தம் வங்கிகளுக்கு அனுப்பி தங்கள் தங்கள் கணக்குகளில் ஓய்வூதியத்தினை வரவில் வைப்பித்து கொள்ளவேண்டும்.

அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்கள் அலுவலக முத்திரையும் அத்தாட்சிப் படுத்திய திகதியும் ஓய்வூதியப் பற்றுச்சீட்டில் பொறிக்கப்பட்டிருத்தல் அவசியம் இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஓ)

# வல்வை கடலில் இராணுவம் சுட்டு இளைஞர் காயம்

வல்வெட்டித்துறை, வியா.

இரு ரோந்து விசைப்படகுகளுடன் பீரங்கிக் கப்பல் ஒன்று பருத்தித்துறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபொழுது இவற்றுக்கு உதவியாக மூன்று வள்ளத்தில் இராணுவத்தினர் சென்றனர்.

இந்த மூன்று வள்ளங்களில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் வல்வைப் பகுதிக் கடலிலிருந்து பொலிகண்டி, திக்கம், இன்பருட்டி கடல் பகுதிகளில் நின்ற மீன்பிடி படகுகள் மீது சுட்டுக் கொண்டே சென்றதால் பொலிகண்டி ஆலடியைச் சேர்ந்த த. சிவகுமார் (வயது-15) என்னும் கடற்றொழிலாளி நெஞ்சில் சூடுபட்டு, படகில் கூட்டிச்சென்ற இளைஞர் சு கிருஷ்ணராஜாவின் உதவியுடன் கரைக்குக் கொண்டு வரப்பட்டு உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (ஓ)

# 'கொள்ளை, வாகனக் கடத்தலில் ஈடுபட்டவருக்கு மரணதண்டனை

—ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், வெள்ளி

"மக்கள் விரோதியான இக்னேஷியஸ் சில்வா சுரேஸ் (மதன்) என்பவருக்கு யாழ் நகரில் மக்கள் விடுதலைப்படையால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது" என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மதன் என்று அழைக்கப்படும் இவர் முன்பு மக்கள் விடுதலைப்படையில் உறுப்பினராக இருந்தவர். ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றை மீறி நடந்தது சில தனியார் வாகனக் கடத்தல்கள் போன்றவற்றில் ஈடுபட்டமைக்காக கடுமையாக எச்சரிக்கப்பட்டு படையிலிருந்து மதனை நீக்கினோம் இதன் பின்னரும் இவர் தனது சகாக்களுடன் சேர்ந்து தனியார் வாகனக் கடத்தல்கள், தனியார் நிறுவன கொள்ளைகளிலும் ஈடுபட்டார்.

இவரது முக்கிய சகாவான ஊத்தைக் காந்தனை கைது செய்து விசாரித்ததில் பல உண்மைகள் வெளியாகின. மக்கள் விரோதியான காந்தனுக்கு நாம் மரண தண்டனை வழங்கினோம். இதைத் தொடர்ந்து மதனின் சகாக்கள் பலரும் எம்மால் கைது செய்யப்பட்டனர்

இவற்றை அறிந்த மதன் இந்தியாவிற்கு தப்பி ஓடுவதற்கு முயன்றபோது மக்கள் விடுதலைப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

எம்மால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் மதனை மக்கள் விரோதி என மரணதண்டனை நிறைவேற்றினோம்

மதனதும் அவரது சகாக்களினதும் மக்கள் விரோத நடவடிக்கைகளில் சில. விக்ரர் அன்சன் கொள்ளை' ஸ்ரான்லி ரோட் இரகுநாதன் வீட்டு கொள்ளை, றேடியோ மனுவல் கொள்ளை, ஆஸ்பத்திரி வீதி கூட்டுறவு சங்க கொள்ளை, ஆஸ்பத்திரி வீதி சபாரத்தினம் வீடு கொள்ளை, டாக்டர் கிருஷ்ணராஜ'வின் கார்கடத்தல் இவைபோன்று வேறு பல கொள்ளைகள், வாகனக் கடத்தல்கள்.

இந்த நடவடிக்கைகளுக்கு சக இயக்கமொன்றின் உறுப்பினர் ஒருவரிடம் களவாடப்பட்ட கைத் துப்பாக்கியை மதன் உபயோகித்தார். இத்துப்பாக்கி எம்மால் கைப்பற்றப்பட்டுள்ளது மதனுடன் இணைந்து செயல்பட்ட ஏனையோரான தி. ஜெயரட்னம் (வெள்ளை) பா. சுதாகரன் (புனிதன்) ராஜ்குமார் (டிலிப்) ஆகிய மூவருக்கும் மொட்டையடித்து யாழ் நகரில் மக்கள் முன் அம்பலப்படுத்துகிறோம். இன்னும் சிலர் தீவிரமாக தேடப்படுகின்றனர், இவர்களுக்கு உடந்தையாக இருந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டு எச்சரித்து விடுவிக்கப்பட்டுள்ளார் (ஓ)

## 1983ல் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# 20,000 விண்ணப்பப் படிவங்கள் யாழ்ப்பாணத்தில் விநியோகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

1983ம் ஆண்டு முதல் நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைகளினால் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களைத் திரட்ட விநியோகிக்கப்படுகின்ற விண்ணப்பப் படிவங்கள் 20 ஆயிரம் இதுவரை யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப் பட்டுள்ளன.

அகதிகள் புனர் வாழ்வு அமைச்சு பாதிக்கப்பட்டவர்களின் புள்ளி விபரங்களைத் திரட்டவே இவ்விண்ணப்பப் படிவங்களை விநியோகிக்கப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் இப்படிவங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன.

ஊர்காவற்றுறையில் ஏழாயிரம் படிவங்களை பாதிக்கப்பட்டவர்கள் பெற்றுள்ளனர். மேலும் 10 ஆயிரம் படிவங்களை ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்க யாழ். திட்டமிடல் பகுதி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் (ச- ஓ)

## மோட்டார் சைக்கிள் விபத்தில்

# ஆசிரியை பலி

யாழ்ப்பாணம், வெள்ளி

கோப்பாய் பருத்தித்துறை வீதியில் நேற்று நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய பாடசாலை ஆசிரியை ஒருவர் மரணமானார்

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியையான திருமதி புஸ்பராசா சியாமளா என்பவரே இந்த விபத்தில் பலியானவராவார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: நேற்றுக் காலை தமது கணவருடன் மோட்டர் சைக்கிளில் மேற்படி ஆசிரியை சென்றுகொண்டிருந்த சமயம் இவர்களைத்தொடர்ந்து வந்த மீன்வியாபார வாகனமொன்று வேகமாக முந்திச் சென்றபொழுது மோட்டர் சைக்கிளின் பின் ஆசனத்தில் இருந்த ஆசிரியையை மோதியதாகவும் இதனாலே ஆசிரியை இறக்கநேரிட்டதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

மரணவிசாரணையை மரண விசாரணை அதிகாரி திரு ஏ. அன்ரனி நடத்தினார். பிரேத பரிசோதனையை சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சரவணபவானந்தன் நடத்தினார். (ச-ஓ)

## இனப்பிரச்னை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹமீட் ஐ நா செயலளார் நாயகத்தை அண்மையில் சந்தித்தபோதே அவர் இந்த நம்பிக்கையைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினையைத் தீர்க்க ஜனாதிபதி ஜயவர்த்தன எடுத்துவரும் முயற்சிகளுக்கு வெற்றி கிட்டவேண்டுமெனவும் அவர் கூறியுள்ளார்.

இச்சந்திப்பின்போது ஜனாப் ஹமீட் இலங்கை அரசின் உத்தேச மாகாணசபைத் திட்டத்தின்கீழ் பரவலாக்கப்படும் அதிகாரங்களைப்பற்றி செயலாளர் நாயகததுக்கு விளக்கமளித்தார். (ஊ-கே)

## எம். ஜி. ஆர்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சுற்று பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்த கலந்தாலோசனைகளில முதலமைச்சருடன் திரு. நெடுஞ்செழியன், திரு. மூப்பனார் ஆகியோர் கலந்துகொண்டனர். (சி)


## பிரயாண ஒழுங்குகள்

★ லிபியா: (ஒயில் கொம்பனி வேக்கேஸ்)
★ குவைத்: (ஆஸ்பத்திரி பெண் கிளீனேர்ஸ்)
★ குவைத்: (ஆஸ்பத்திரி ஆண் கிளீனேர்ஸ்)
★ குவைத்: (மெயின்ரனன்ஸ் கிளீனேர்ஸ்)
★ குவைத்: (100 கிலோ அரிசி மூட்டை தூக்கக் கூடிய லேபறேஸ்)
★ குவைத்: (றெயிலர் றைவேஸ் போக் லிப்ற் றைவேஸ்)
★ துபாய்: (எக்கவுண்டன்ஸ், றைவேஸ்/ ஓரோமெக்கானிக், சேல்ஸ்மென், ஸ்ரெனோ கிருபர், ஸ்ரோர் கீப் பேஸ் மெக்கானிக்ஸ், சிவில் இஞ்ஜினியேஸ், சேவியேஸ், ஹெவி அன் லைற் வெயிக்கிள் றைவேஸ், காப்பெண்ரேஸ், மேசன், குக் அன் சீப்குக்
★ நோத்யெமன்: (அக்கிரிகல்சர் லேபறேஸ்
★ சவுதி அரேபியா: (ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்)
★ சவுதி அரேபியா: (ஸ்கூல் கிளீனேர்ஸ்)

இவ்விடங்களுக்கு வருமான ஒழுங்குகள்பெற விரும்புவோர் சகல ஆவணங்களுடனும் நேரில் வரவும்.

பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேசல் ஏஜென்சி**

125, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
பி. கு:
(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக, ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)

(A 1376)



## பிரயாண ஒழுங்குகள்

★ **லிபியா:** ஒயில் கொம்பனி வேக்கேஸ்

★ **குவைத்:** ஆஸ்பத்திரி கிளீனேஸ்-ஆண், மெயின்ரனன்ஸ் கிளீனேஸ், ஆஸ்பத்திரி பெண் கிளீனேஸ், கவுஸ் மெயிட்ஸ், 100 கிலோ அரிசி மூட்டை தூக்கக்கூடிய லேபறேஸ், றெயிலர் றைவேஸ், போக்லிப்ற் றைவேஸ்,

★ **துபாய்:** எக்கவுண்டன்ஸ், றைவேஸ்/ ஓரோமெக்கானிக், சேல்ஸ்மென், ஸ்ரெனோ கிருபர், ஸ்ரோர் கீப்பேஸ். மெக்கானிக்ஸ், சிவில்இஞ்ஜினியேஸ் சேவியேஸ், ஹெவி and லைற்வெயிக்கிள் றைவேஸ், காப்பெண்ரேஸ், மேசன், குக், சீப் குக்.

★ **நோத் யேமன்:** அக்கிரிகல்சர் லேபறேஸ்.

★ **சவுதி அரேபியா:** ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்.

★ **சவுதி அரேபியா:** ஸ்கூல் கிளீனேஸ்.

மேற்குறிப்பிட்ட இடங்கட்கு வருமான ஒழுங்குகள் பெற விரும்புவோர் உடனடியாக சகல ஆவணங்களுடன் எங்களிடம் நேரில் வரவும்,

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**

பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு. இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும். [A 1377]

# இன்றைய பலன்

மாதம்:- புரட்டாதி
கிழமை;- வெள்ளி
திகதி:- 17 (3-10-86)
திதி:- அமாவாசை
பி இ. வரை
நக்ஷத்திரம்:- உத்தரம்
பி. ப. வரை

மேடம்:- வாகனச்சாரதிகள் அவதானம் வேண்டும். பிரயாணத்தைப் பின்போடவும். உள்ளத்தின் அடித்தளம் ஊமைக்கண்ணீர் வடிக்கும்.

இடபம்:- நீண்டநாள் பிரச்சினையில் இன்று சமரசமான முடிவு தென்படும். சிலருக்கு அரசியல் ஆர்வமும் பிறக்கும். எதிலும் புதிய எண்ணங்கள் உருவாகும்.

மிதுனம்:- மனைவாழ்விலும் மகிழ்ச்சிதென்படும். குருவின் ஆசியுடன் குறிக்கோளிலும் வெற்றிக்கொடியை நாட்டுவீர்கள் உற்சாகம்பிறக்கும்.

கடகம்:- லாபகரமான தொழிலில் ஈடுபடுவீர்கள். புதிய நண்பர்கள் சேர்க்கையுண்டு. நற்கருமமும் கைகூடும்.

சிங்கம்:- இளமைநினைவுகள் வேதனையைத்தரலாம். தூக்கம் விழிகளைத் தழுவமறுக்கும். தொழிலிலும் தொல்லைகள் உருவாகும்.

கன்னி:- பிரயாணம் மூலம் பணத்தை இழக்கநேரிடும். குறை கேட்கவும் நேரிடும்.

சமயோசித புத்தி விரும்பத்தக்கது.

துலாம்:- பேச்சு வன்மையால் காரியத்தைச் சாதிப்பீர்கள். அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும். சிலருக்குப்புது வாழ்வு மலரும், சுகபோக தினம்.

விருச்சிகம்:- தூரத்துப் பயணம் துயரத்தைத்தரலாம். பொருள் விரயமும் ஏற்படலாம். வீண்பிரச்னைகளும் இடம்பெறலாம்.

தனுசு:- வாகனச்சாரதிகள் பயனடைவர். தானிய விருத்தியுண்டு. பூமிலாபமுமுண்டாம். தாய்வழி நற்செய்தியுமுண்டு.

மகரம்:- உத்தியோக உயர்வுக்கு வழிகோலப்படலாம். ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம்காட்டுவீர்கள். தேனுன வாழ்வுமுண்டு.

கும்பம்:- பண நெருக்கடி தோன்றும். தனிமரமாகிவிட்ட எண்ணம் தலைதூக்கும். பின்னணியில் பிளவுக்குஇடமுண்டு. செறுமைநன்று.

மீனம்:- ஒளிமயமான வாழ்க்கை, நீண்டநாள்பிணி இன்று அகலும். தொழில்துறையிலும் மதிப்புயரும். நன்றன்.

திருமலை
க. வே. ரவீந்திரன்


## அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்/சன்மார்க்க மகாவித்தியாலய பழையமாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் 05-10 86 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். சகல பழைய மாணவர்களையும் தவறாது சமூகந்தருமாறு அழைக்கிறோம்.

அதிபர்.

A 1427



## Wanted Music Teacher

Nuffield School for the Deaf and Blind, Kaitadi is looking for a teacher who can play the accordian and other instruments and is capable of training the school choir. Please apply in person with your credentials on any working day before the 8th October.

PRINCIPAL

A 1429


# யாழ். அடைக்கலநாயகி ஆலய, வளர்ச்சிக்கு வாழ்வை அர்ப்பணித்தார்

யாழ்ப்பாணம், வெள்ளி

''இலங்கையில் கிறிஸ்தவம் பரவுவதற்கு யாழ் அடைக்கலநாயகி ஆலயத்தின் பங்களிப்பும் ஒரு காரணமாகும் இந்த ஆலய வளர்ச்சிக்கு எனக்கு முன் பங்குகுரவர்களாக கடமையாற்றியவர்கள் பொது மக்களிடம் பணத்தைக் கேட்டுப் பெற்று செலவு செய்தார்கள் ஆனால் நான் கடமையாற்றிய காலத்தில் மக்கள் தாமாகவே வலிந்து வந்து பண உதவி செய்தார்கள்.''

அருட்திரு. இ. ஜே அருமைநாயகம் யாழ். அடைக்கலநாயகி ஆலயத்தில் பங்குத்தந்தையாகக் கடமையாற்றி யாழ் கத்தோலிக்க அச்சகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதை பிரியாவிடை வைபவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

யாழ் அடைக்கலநாயகி ஆலயத்தில் இப் பிரியாவிடை வைபவம் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்திரு இ. ஜே அருமைநாயகத்தின் சேவையைப் பாராட்டிப் பேசிய திரு, ஓ. எஸ். அகஸ்தீன் மிகவும் சுறுசுறுப்புடன் பற்றற்ற வாழ்க்கையில் தனது வாழ்வை இந்த ஆலயத்திற்கு அர்ப்பணித்தார் என்று கூறினார்.

திருமதி, இராஜநாயகம் தனது பாராட்டுரையில் கடந்த ஐந்து வருடங்களாக திசை மாறிச் செல்லும் இளைஞர்களையும் யுவதிகளையும் ஆலயத்தில் மறையுரைகளை வாசிக்கும் பழக்கத்திற்குக் கொண்டுவந்தார். எனறு கூறினார்.

ஞானம்ஸ் ஸ்ரூடியோ அதிபர் அருட்திரு. இ. ஜே. அருமைநாயகத்திற்கு மலர் மாலை அணிவித்துக் கௌரவிக்க திரு சுரேஸ் அகஸ்ரீன் செல்வி சாந்தினி சின்னற்துரை ஆகியோர் கவி மாலை சூட்டினார்கள்.

புதிய பங்குத்தந்தையாக நேற்றுமுதல் அருட்திரு பொன்னையா அடிகளார் பதவியேற்றுள்ளார். [வா]


## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### குடி நீர் விநியோகத் திட்டம்

பின்வரும் இடங்களுக்கு சிறு குடி நீர் திட்ட அமைப்பு வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்துடனோ அன்றி வேறு அரசாங்க திணைகளத்துடனோ ரூபா 10.000 000 (பத்து லட்சம்) குறையாத ஒப்பந்தகாரராக பதிவு செய்யப்பட்டவரிடமிருந்து யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 16-10-86 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. கொழும்புத்துறை
2. மூத்த விநாயகர் கோயிலடி
3 நாயன்மார் கட்டு.

15-10-86 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணி வரை மீளளிக்கப்படக் கூடிய கேள்விப் வைப்புப் பணமாக ரூபா 2500/-ம் மீளளிக்கப்டாத கேள்வி வைப்புப் பணமாக 250/-ம் செலுத்துவதன் பேரில் மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

சி. வி. கே. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

[A 1428


உண்ணாவிரதம் கைவிடப்படாவிட்டால்

# பலாத்காரநடவடிக்கைஎடுக்க சிறை அதிகாரிகள் முடிவு

கொழும்பு, வியா.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தமிழ் இளைஞர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிடமறுத்தால் பலாத்காரமானமுறையில் இதனைக்கைவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென சிறை அதிகாரிகள் முடிவெடுத்துள்ளதாக நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

முன்பு ஒரு தடவையும் இதே போன்று நடந்ததையும் குறிப்பிட்டே அதிகாரிகள் இம் முடிவை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. [கூ-சி]

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

வெலிக்கடை, பூஸாசிறைச் சாலைகளில் சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து சங்கானை ப. நோ கூட்டுறவு ஊழியர் யர் தொழிற் சங்கத்தினர் இன்று காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை சங்கானை அரசடி வைரவர் ஆலய முன்றலில் ஒரு நாள் உண்ணாவிரதம் அனுஷ்ட்டிக்கவுள்ளனர். [வா)

## அமெரிக்கா

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யும்.

அமெரிக்காவிலிருந்து தானிய இறக்குமதிக்கு தென்னாபிரிக்கா தடை விதிக்கும். அத்துடன் தென்னாபிரிக்காவின் அயல் நாடுகளில் இதனை விநியோகிக்கும் போக்குவரத்து நடைமுறைகளுக்கும் தென்னாபிரிக்க அரசு தடைவிதிக்கும். இதன் மூலம் தென்னாபிரிக்காவைச் சூழவுள்ள 15 கோடிமக்கள் பாதிப்படைவர் என்று எச்சரித்துள்ளார்.

சண்டிலிப்பாயில்

## லொறி தீ பிடித்தது

யாழ்ப்பாணம். வெள்ளி

பல்லாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த பொருட்களுடன் வந்த லொறியொன்று மின்சாரவயருடன் முட்டிக்கொண்டதனால் தீப்பற்றி எரியத் தொடங்கியது. இருந்தும் மக்களின் தீவிர முயற்சியினால் உடன் தீ அணைக்கப்பட்டது டன் பொருட்களும் காப்பாற்றப்பட்டன.

மேற்படிச் சம்பவம் கடந்த ஞாயிறன்று மாலை கல்வளைப் பிள்ளையார் கோவிலுக்கருகிலுள்ள கேணிக்கட்டு கிராமப் பகுதியிலுள்ள வீதியில் இடம் பெற்றது. (எ)


## சாவகச்சேரி நகராட்சிமன்றம் 1987ம் ஆண்டிற்கான

## கேள்வி அறிவித்தல்

01-01-1987 தொடக்கம் 31-12-1987 வரையிலான காலப்பகுதிக்குள் கீழ்க்குறிப்பிடுவனவற்றிற்கான கேள்விகள் இரு பிரதிகளில் 10-10-86ந் திகதி நண்பகல் 4-15 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்;

| வியாபாரம் | கடை இல; | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| ................ | ................ | ................ | ................ | ............ |
| 1. மாட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். 3 | 65000-00 | 1000-00 | 50-00 |
| 2. மாட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ் 4 | 65000-00 | 1000-00 | 50-00 |
| 3. ஆட்டிறைச்சிக்கடை | என். எம் எஸ் 1 | 32000-00 | 1000-00 | 50-00 |
| 4. ஆட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். 2 | 32000-00 | 1000-00 | 50-00 |

மேற்படி வைப்புப் பணமும், கேள்விப்படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 09-10-86ந் திகதி நண்பகல் 12-30 மணிவரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக்கட்டணங்கள் திருப்பித் தரப்படமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் திருப்பித்தரப்படும் கேள்வி வைப்புப்பணமும், படிவக்கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
தலைவருக்காக,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி.

(A 1426)


# முல்லைக்கிண்ணம்; ஆசிரியர் சின்னம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பசு அல்லது மாடு என்பது செல்வம் என்ற கருத்துடையது பட்டியாய் மாட்டை ஆதரிக்கும் முல்லை மாவட்ட விவசாயிகள் பசு தரும்பயனை அதிகரிக்கும் பொருட்டு இரு வெண்ணை நீக்கி யந்திரங்களை அண்மையில் அரச அதிபர் க பொன்னம்பலம் குமுளமுனை, முத்துஐயன்கட்டு கால்நடை அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் அறிமுகம் செய்து வைத்தார். மூன்றும் வெண்ணைநீக்கி யந்திரத் துணுக்காய், மாந்தை கிழக்குப் பகுதி விவசாயிகள் பாவனைக்கு நேற்று வழங்கப்பட்டது.

கல்விக்கு முதலிடம் என்ற அமைப்புத்திட்டத்தில் உடற்பயிற்சிக் கல்வியை ஊக்குவிக்க முல்லை மாவட்ட உதைபந்தாட்டி அமைக்கப்படும். அதில் வெற்றிபெறும் பாடசாலைக்கு முல்லை கிண்ணத்தை வழங்க அரச அதிபர் முன்வந்துளார்.

முல்லைக் கிண்ணம் ஆசியர்களின் சின்னம். 3000 (மூவாயிரம்) ரூபாய் பெறுமதியான இக்கிண்ணம், முன்னைநாள் ஆசிரியர்களின்பாவனையில் இருந்தவெண்கலப் பொருள்களும். முத்துஐயன்கட்டு நீர் தேக்கத்திலிருநது எடுக்கப்பட்ட கருங்காலி மரமும் இணைக்கப்பட்ட இக்கிண்ணம் திறமை வாய்ந்த சிற்ப ஆசிரியரால் தயாரிக்கப்பட்டது.

பல்லாண்டுகளாகக் கல்விக்குத் தம்மை அர்ப்பணித்த ஆசிரியர்கள், இன்று அத் தொண்டில் ஈடுபடும் ஆசிரியர்களின் சேவையைக் கௌரவிக்கும் முகமாகவே இக் கிண்ணம் வழங்கப்படுகிறது.

வித்தியானந்த கல லூரி. செம்மலை மகாவித்தியாலயம், முல்லைத் தீவு மகாவித்தியாலயம்; புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயங்கள், மல்லாவி மகாவித்தியாலயம் என்பன நேற்றைய போட்டியில் கலந்துகொண்டன.

நேற்று முன்தினம் தொடங்கிய இப்போட்டி, இரண்டாம் வாரம் முடிவடைகிறது. இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் பாடசாலைக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கும் வைவமும் நடைபெற இருக்கிறது.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 3-10-86

எமது பிராந்தியத்தில் நடைபெறும்

# விடுதலைப் போராட்டத்தில் மக்கள் முழுமையாகப் பங்களிக்கவில்லை

## — பேராசிரியர் நேசையா

யாழ்ப்பாணம், வெள்ளி

"இந்தியாவில் நடைபெற்ற சுதந்திரப்போராட்டத்திற்கும் எமது பிரதேசத்தில் நடக்கின்ற போராட்டத்துக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. இன்று எமது பிராந்தியத்தில் நடைபெறும் போராட்டத்தில் தமிழ் மக்கள் தமது முழுமையான பங்களிப்பையும் செலுத்தவில்லை."

இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்தின் போது மக்கள் பல ரூபங்களில் தமது பங்களிப்பைச செலுத்தினர். இங்கு மிகவும் ஒருசிறு பகுதியினரே போராட்டத்தில் குதித்துள்ளனர். ஏனையோர் தத்தமது வேலைகளில் மட்டுமே ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு யாழ். வை. எம். சி. ஏ மண்டபத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தியடிகளின் பிறந்த தின ஞாபகக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய பேராசிரியர் கு. நேசையா தெரிவித்தார்.

யாழ். மாநகர சபை நூலக சேவைக்குழு இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது

தொடர்ந்து பேசிய பேராசிரியர் நேசையா மேலும் கூறியதாவது:

எமது தமிழீழ மண்ணில் விடுதலை கோரிப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ் வேளையில், எம்மவர்களில் அநேகர் வெளிநாடு சென்று பணம் சம்பாதிப்பதில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் இவ்விதமான நடவடிக்கைகள் போராட்டத்திற்கு எவ்வித பயனையும் அளிக்காது. பின்னடைவையே ஏற்படுத்தும்.

எமது மக்கள் மத்தியில் இன்னமும் மலிந்து கிடக்கும் சாதிப் பாகுபாடே எமது மக்களின் போராட்டத்திற்கான ஐக்கியத்துக்கு இடையூறாகவுள்ளது. இதனை நாம் களைந்தெறிய வேண்டும்.

பேராசிரியர் "நந்தி" சிவ ஞானசுந்தரம், அறவழிப் போராட்டக்குழுச் செயலாளர் திரு க. ஜீவகதாஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

நூலகச் சபைத் தலைவர் எஸ்ற போதாவில் யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சி வி கே. சிவஞானம் நன்றி கூறினர். (ச - கே)

## மருத்துவபீடப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம். வெள்ளி

1986-87ம் ஆண்டிற்கான புதிய பல்கலைக்கழக விரிவுரைகள் ஒக்டோபர் மாதம் 6ம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

அதே சமயத்தில் 2ம் வருட மருத்துவபீடப் பரீட்சைகள் ஒக்டோபர் மாதம் 15ம் திகதி ஆரம்பமாகி நடைபெறும். (ஒள)

வர்த்தக நிலயத்தில்

## பணம் கையாடியவருக்கு மக்கள் வழங்கிய தண்டனை

யாழ்ப்பாணம் வெள்ளி

தெல்லிப்பழையில் வர்த்தக நிலையமொன்றில் பணத்தைக் கையாடிய நபரொருவர் பொது மக்களால் பிடிக்கப்பட்டு மின் கம்பத்துடன் கட்டப்பட்டார்.

நேற்று நடந்த இச் சம்பவத்தில் மேற்படி நபர் பொருட்களை வாங்குவதற்கு வந்தது போல பாசாங்கு செய்துகொண்டு மேசை லாச்சிக்குள் இருந்த பணத்தைக் கையாடினார்.

அவரின் செய்கையில் சந்தேகங் கொண்ட மக்கள் உடனடியாகப் பிடித்துச் சோதனையிட்டதைத் தொடர்ந்து நானூறு ரூபா பணம் கைப்பற்றப் பட்டதுடன் பொது மக்களால் மின்கம்பத்தில் கட்டப்பட்டு பார்வைக்கும் விடப்பட்டது. (எ)

## உதவிப்பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் நெசவுப் பயிற்சிய பாடசாலையில் சித்தியடைந்தோருக்கான சான்றிதழ்களை யாழ் செயலகத்திலுள்ள புடவைக் கைத்தொழில் பகுதிப் பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு உதவிப்பணிப்பாளர் ஜி. பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (மா)

சிறைச்சாலை தமிழ் கைதிகள் உண்ணாவிரதம்:

# மேலும் 24 பேர் மயக்கநிலை:

## ஹென்றி தொடர்ந்து உண்ணாவிரதம்

(நமது நிருபர்)

சிறைச்சாலைகளில் தமது அடிப்படை உரிமைகளை கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ்க் கைதிகளுள் மேலும் 24 பேர் மயக்கநிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மயக்க நிலையிலுள்ள 24 உண்ணாவிரதிகள் வெலிக்கடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் உண்ணாவிரதிகள் கோரிக்கைகள் நிறைவேற்றும் வரை தாமும் தொடர்ந்து உண்ணாவிரமிருக்கப்போவதாகவும சிறைவைக்கப்பட்டிருக்கும் இளைஞரான ஹென்றி பெரேரா தெரிவித்ததாகவும் தகவல் கிடைத்துள்ளது.

நேற்று ஹென்றி பெரேரா 5-வது நாளாகவும், வண. பிதா சிங்கராயர் 3-வது நாளாகவும் உண்ணாவிரதமிருக்கின்றார்கள்.

சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும தமிழ் இளைஞர்களுக்கு அரசு அனுப்பி வைத்துள்ள பதிலறிக்கையை மீண்டும் இளைஞர்கள் ஏற்க மறுத்துவிட்டனர்.

ஏற்கனவே ஆபத்தான நிலையிலிருந்த இரு உண்ணாவிரதிகளும் தொடர்ந்தும் இராணுவ ஆஸ்பத்திரியிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

வெலிக்கடை சிறைச் சாலையில் 95 பேரும் பூஸா முகாமில் 115 பேரும் நற்றவரை உண்ணாவிரதம் இருப்பதுகுறிப்பிடத்தக்கது. (மா)

## உண்ணாவிரதம்

அராலி.வியா.

வெலிக்கடை, பூஸா முகாம்களில் நடைபெறும் அட்டூழியங்களைக் கண்டித்து சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் கைதிகளுக்கு ஆதரவாக சங்கானை ப.நோ.கூ. சங்க ஊழியர் தொழிற் சங்கத் தலைவர் திரு. பொ. கனகரத்தினம் தலைமையில் சங்கானை அரசடி வைரவ ஆலயத்தில் ஒருநாள் உண்ணாவிரதத்தை இன்று நடாத்தவுள்ளது. (எ)

## இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம் வெள்ளி

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான கொடியேற்றம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

காலை 6. 45 மணிக்கு உதய காலப் பூசை 7. 30 மணிக்கு கால சந்தி 8 மணிக்கு துவஜாரோகண கிரிகைகள் ஆரம்பம் 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை, நடைபெறும். (வா)

## சமாதான ஊர்வலம்

கொழும்பு. வியாழன்

"எவ்வித ஆயுதங்களுமின்றி வவனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சமாதான ஊர்வலமொன்றை நடாத்த விரும்புவதாக சர்வோதய இயக்க தலைவர் ஆரியரட்ண தெரிவித்துள்ளார்

இந்த ஊர்வலத்தின்போது தாம் பாதுகாப்பு படைகளின் உதவியின்றி அங்கு சென்று மக்களுடன் உரையாட விரும்புவதாகவும் கூறியுள்ளார். (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி சிற்றம்பலம் கனகம்மா

கரணவாய் தெற்கைச் சேர்ந்த சிற்றம்பலம் கனகம்மா (இளைப்பாறிய ஆசிரியை) 1986-09-30ம் திகதியன்று சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், கணேசன் U K:, இலம்போதரன் U K ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை (ஆசிரியை), காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை (கிராமசேவையாளர், கரவெட்டி வடக்கு), விசாலாட்சி, தெய்வநாயகி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி கமலாசனி தவலிங்கம், பத்மாசனி இரட்ணகோபால், வல்லிபுரநாதன் U K. லோகாசனி U. K., இரஜனி, வேந்தன், சிவாஜினி ஆகியோரின் பெரிய தாயாரும், திருமதி திருத்தேவி வல்லிபுரநாதனின் அன்பு மாமியாருமாவர். அன்னாரின் தகனக்கிரியைகள் 1986-10-03ம் திகதி (இன்று) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் உற்றார். உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்

மக்கள்.

கலட்டி, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

(C 4973)

### திருமதி குணம் மரியரத்தினம்

சாவகச்சேரி திருமதி குணம் மரியரத்தினம் காலமானார். அன்னார் திரு. V. குணரத்தினத்தின் [முன்னாள் அடைவுகடை உரிமையாளர்] அன்பு மனைவியும், ஜெயம், ஜெயராசா, லீலா (நைஜீரியா), நவம், விமலா [U K.] ஆகியோரின் அன்புத் தாயாரும், அரசரத்தினம் (ஆசிரியர்), இன்பம், ஆரோக்கியம் (நைஜீரியா), ரவீந்திரக்குமார் [சுங்க இலாகா], நவரட்ணம் (U. K] ஆகியோரின் அன்பு மாமியாரும், திரு மனுவேல்பிள்ளை, காலஞ்சென்ற திரு. தம்பிராசா, திரு பிரகாசம், திருமதி பொன்மணி, காலஞ்சென்ற திருமதி இராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று வெள்ளிக்கிழமை (3-10 86) பிற்பகல் 3-00 மணியளவில் சாவகச்சேரி புனித லிகோரியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

நவசோதி
சாவகச்சேரி.

தகவல் தருபவர்:
திரு. அரசரத்தினம்.

(C 4981)

## கிரிக்கெட்; இந்திய அணி வெற்றி!

புதுடில்லி, ஒக்டோபர். 2

இந்திய-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் டில்லியில் நடைபெற்ற நான்காவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட போட்டியில் இந்தியா மூன்று விக்கெட்டாலும் நான்கு ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 45 ஓவர்களில் ஆறு விக்கெட்டுகள் இழப்பிற்கு 238 ஓட்டங்களைப் பெற்றது.

இதனைத்தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 43 2 ஓவர்களில் 242 ஓட்டங்களைப்பெற்று வெற்றி பெற்றது

இந்தியஅணிசார்பில் ராமன் லம்பா, ரவி சாஸ்திரி (ஆட்டமிழக்காமல்) சிறப்பாக துடுப்பெடுத்தாடி முறையே 74, 59 ஓட்டங்களைப்பெற்றனர். ஆட்டத்தின் சிறந்த வீரராக ராமன் லம்பா தெரிவுசெய்யப்பட்டார். (சி)

## கடற்படையினர் மீது போராளிகள் தாக்குதல்

### -ஈ பி. ஆர் எல். எவ்.

யாழ்ப்பாணம், வெள்ளி

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து கடற்படையினர் வெளியில்வந்தபொழுது தமது போராளிகள் தாக்குதல் மேற்கொண்டதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"கடந்த 30-ம் திகதி மாலை மூன்று மணியளவில் முகாமை விட்டு (காரைநகர்) வெளியில் வந்த கடற்படையினருக்கும் எமது போராளிகளுக்கும் இடையே ஏற்பட்ட நேரடி மோதலின்போது எம்மால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்திலும் மோட்டார் ஷெல் தாக்குதலினுலும் கடற்படையினருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. எமது தரப்பில் ஒருவருக்கு சிறுகாயம் ஏற்பட்டுள்ளது. எமதுதாக்குதலை அடுத்து முகாமைச் சென்றடைந்த கடற்படையினர் தமது முகாமில் இருந்து பீரங்கித் தாக்குதலையும், மோட்டார் ஷெல் தாக்குதலையும் நடாத்தினர். இதன்போது எமது போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட மோட்டார்த் தாக்குதலின்போது முகாமினுள் நகர்ந்து கொண்டிருந்த ஜீப் வண்டி மீது எமது ஷெல் விழுந்தமையினுல் நான்கு கடற்படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் ஒருவருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்செய்தியினை அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் ஐந்து கடற்படையினருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் காரை நகர் கடற்படை முகாமிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட கடற்படையினர் வெளியேற எடுத்த முயற்சி எமது போராளிகளினுல் முறியடிக்கப்பட்டது. இந்நேரடி மோதலின்போது எமது தரப்பில் எதுவித இழப்புமில்லை கடற்படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி அறிய முடியவில்லை" (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126